# 15. எழில் கொஞ்சும் அருவி

அ) வினாக்களுக்கு விடையளி:

கேள்வி 1.
ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்க வேண்டிய இடங்களைக் கூறுக.
விடை :
ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, மான் பூங்கா, முதலைப் பண்ணை .

கேள்வி 2.
ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, பார்ப்பதற்கு எப்படி இருந்தது?
விடை :
ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, வெள்ளியை உருக்கி ஊற்றியது போல்காணப்பட்டது.

கேள்வி 3.
சங்கவை பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் என்ன ?
விடை :
சங்கவை பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் தேசநாதீஸ்வரர் கோயில்.

கேள்வி 4.
ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி எங்கே அமைந்துள்ளது?
விடை :
ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி தருமபுரி மாவட்டத்தில் உள்ள பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது.